# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 172/2019

2ம்வாதி தரப்பு 1ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

-------------------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்குமார் வா.சா.1 | சாதி | |
| த/பெ. | சாமி | மதம் | |
| கிராமம் | | தொழில் | Head Master |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 46 |

-------------------------------------------------------------------

முதல் விசாரணை 23-10-2025.

நான் இந்த வழக்கின் 2ம்வாதியின் மகன் ஆவேன். என் தாயாருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவருக்காக சாட்சியம் அளிக்க நான் ஆஜராகியுள்ளேன். 2ம் வாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை 2ம்வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 04.12.1985ம் தேதியிட்ட 2ம் வாதிக்கு சுப்பிரமணியன் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சார்பதிவகநகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 2ம் வாதியின் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது (எண்ணம் 1) அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. சாட்சியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிட்ட நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 09.08.2019 ம் தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் முதல்நிலை அறிக்கை அசல் **நீ.மா.சா.ஆ.1** மற்றும் வரைபடம் அசல் **நீ.மா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. 13.06.2025 ம் தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் இறுதிநிலை அறிக்கை அசல் **நீ.மா.சா.ஆ.3** மற்றும் வரைபடம் அசல் **நீ.மா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S